| O.S.No. 28/2025 | PW1: திரு. ரவீந்திரன்<br>த/பெ. திரு. பச்சையப்பன் | 22-01-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. எனக்கும் பிரதிவாதிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் உண்டு என்றால் இல்லை. இந்த சொத்து சம்மந்தமாக பிரதிவாதிக்கு கடிதம் ஏதேனும் எழுதினீர்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிக்கு வா.சா.ஆ.2 அறிவிப்பு அனுப்பினேன். அதனை பிரதிவாதி பெற்றுக்கொண்டார். அந்த அறிவிப்பிற்கு பிரதிவாதி பதில் அறிவிப்பு கொடுத்தார். அதனை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பில் அவர் ரூ.7,00,000/–த்துக்கு அடமான கடன் பத்திரம் எழுதிக்கொடுக்க வந்தார் என்றும், நான் கிரைய ஒப்பந்தமாக எழுதி வாங்கிக்கொண்டேன் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

2. கடனுக்கு பொறுப்புக்காக எழுதிக்கொடுத்த ஆவணம் என்பதால்தான் நான் அந்த கடனை பைசல் செய்ய சொல்லி நான் பிரதிவாதிக்கு கடிதம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. மொத்தத்திற்கும் பிரதிவாதி வட்டி கொடுத்துவந்தார் என்றாலும், அதற்கு பிரதிவாதி ரசீது கேட்டதால் நான் தரமாட்டேன் என்று சொன்னால் எங்கள் இருவருக்கும் தகராறு ஏற்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி வட்டி கொடுத்த ரசீதை கேட்டதால்தான் வட்டி கொடுப்பதானது நின்றுபோய்விட்டது என்று சொன்னால் சரியல்ல. பெருமாள் சார்பாக அவரது மகன் வெங்கடேசன் வட்டி கொடுப்பார் என்று சொன்னால் இல்லை. பிரதிவாதியின் மகன் வெங்கடேசன் வட்டி கொடுத்ததற்கு G–Pay சம்மந்தப்பட்ட ஆவணங்கள் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு கொடுத்த கடிதத்தையும் தற்போது வழக்கிற்காக மறுக்கிறேன் என்று சொன்னால்

சரியல்ல. அந்த கடிதத்தில் கூடிய சீக்கிரம் பைசல் செய்யுங்கள் என்ற வாசகம் உள்ளது என்றாலும், அதனால்தான் நான் அதனை மறைக்கிறேன் என்றாலும் சரியல்ல. அதனால்தான், பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பில் மொத்தமாக உடனடியாக பைசல் செய்ய முடியாது என்றும், மேலும் கால அவகாசம் வேண்டும் என்று கேட்டு தெரிவிக்கப்பட்டது என்று சொன்னாலும், அதனை நான் ஒப்புக்கொள்ளாமல் வழக்கு தாக்கல் செய்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.01.22 13:35:25 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**